**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**P.W.2**

**MCOP No.118/2024**

| | |
|---|---|
| **Name** | : மணிகண்டன் |
| **Father's Name** | : பொன்னுசாமி |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 13.11.2025.**

**ம.சா.2 முதல் விசாரணை:-**

1) எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில் 2 வது சாட்சி. ஆவணங்கள் எதுவும் இல்லை.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) செல்வி கவிதா புனிதா ஆகியோர் கேட்டுகொண்டதன் அடிப்படையில் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நான் நஷ்ட ஈடு கோரி நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் இரு சக்கர வாகனம் ஓட்டி சென்றேன். ஓட்டுநர் உரிமம் உள்ளது. கொண்டு வரவில்லை. உண்மையிலேயே எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் தாக்கல் செய்து இருப்பேன் என்றும் ஓட்டுநர் உரிமம் இல்லாததால் தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வண்டி ஓட்டுவதற்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்று

சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் நான் தான் என்றால் சரியல்ல. இந்த விபத்து நடந்த நேரம் இரபு 9.15 என்றால் சரிதான். தென்வடல் ரோட்டில் செல்லும் போது இந்த விபத்து நடைபெற்றது. தென்வடல் ரோட்டிற்கு வடபுறம் தான் நாங்கள் வேலை பார்க்கும் மில் உள்ளது.

3) நாங்கள் இருவரும் ஒரே கம்பெனியில் வேலை பார்த்து வந்தோம். வேலைக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. நான் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் திடீரென்று வலது பக்கம் திரும்பியதால் விபத்து ஏற்பட்டதால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் நான் வலது புறம் திரும்புவதற்கு சைகை விளக்கு போட்டு திரும்பும்போது இரு சக்கர வாகனம் திடீரென்று வந்து மோதிவிட்டது. நான் எந்த வித சைகையும் அந்த சமயத்தில் செய்யாமல் திடீரென்று நான் திரும்பியதால் தான் அந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மீது கவனக்குறையும் தவறும் உள்ளதால் தான் நான் இழப்பீடு கோரவில்லை என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் இந்த விபத்திற்கு நானும் முழு பொறுப்பும் என்றால் சரியல்ல. இறந்து போன பழனி என் கூட வேலை செய்த நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:41:17 +0530

**Accidents Claim Tribunal, Attur.**